**சார்பு நீதிமன்றம், அரூர்**

**நாள் – 14.07.2025**

**OS.176/2017**

**வா.சா.3 திரு.முத்து**
**வா.சா. 3 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**
**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம். நான் எச். அக்ரஹாரம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் என்றால் சரிதான், 1996–2001 வரையில் இருந்தேன். என்னை சாட்சியம் அளிக்க என்னை யார் அழைத்து வந்தது என்றால் ராஜிவ்காந்தி அழைத்து வந்தார். எதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் வேலு என்பவர் ராஜிவ் காந்திக்கு விற்பனை செய்தார் அது சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். யார் என்னை வியாபாரம் பேச அழைத்து சென்றது என்றால் ராஜிவ்காந்தி. எப்பொழுது வியாபாரம் பேசினோம் என்றால் 2016ம் வருடம் தேதி, மாதம் நினைவில்லை. எங்கு வைத்து வியாபாரம் பேசினோம் என்றால் எச்.அக்ராஹரம் ரோட்டிற்கு அருகில் உள்ள வேலுவின் வீட்டில் வைத்து பேசினோம்.

2. வியாபாரம் எப்பொழுது பேசினோம், பத்திரம் எப்பொழுது எழுதினோம் என்றால் வியாபாரம் பேசிய அன்றே பத்திரம் எழுதப்பட்டது, வியாபாரம் பேசிய தேதி 2016 ம் வருடம் தேதி, மாதம் நினைவில்லை, பத்திரம் எழுதிய தேதியும் அதே நாள் தான். பத்திரம் யார் வாங்கி வந்தது என்றால் எங்கள் ஊர்கவுண்டர் சாமிநாதன் என்பவர் தான் வாங்கி வந்தார். வியாபாரம் பேசும்போது சாமிநாதனும் உடன் வந்தாரா என்றால் ஆமாம். அந்த பத்திரத்தை எங்கு வைத்து, யார் எழுதியது என்றால் அரூர் பத்திர அலுவலகத்தில் வைத்து

எழுதப்பட்டது, மனோகரன் என்பவர் எழுதினார், நான் அன்று பத்திர அலுவலகத்திற்கு வருவதற்கு முன்பே பத்திரம் எல்லாம் தயார் செய்து பதிவு செய்துவிட்டதாக சொன்னார்கள். பத்திரத்தில் என்ன எழுதினார்கள் என்ற விவரம் எல்லாம் எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான், நான் பின்னிட்டு தான் வந்தேன், விலை பேசியபோது மட்டுமே நான் இருந்தேன்.

3. என்ன ஆவண எண்ணில் அரூர் பத்திர பதிவு அலுவலகத்தில் பத்திரப்பதிவு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. எத்தனை ஏக்கர், ஏக்கர் எவ்வளவுக்கு விலைபேசப்பட்டது என்றால் 3 ஏக்கர், 1 ஏக்கர் தலா ரூ.3,00,000/–க்கு மொத்தம் ரூ.9,00,000/–க்கு விலைபேசப்பட்டது. நான் சொல்வதுபோல நிலத்தை விற்பதற்காக பிரதிவாதி பணம் வாங்கவில்லை, ரூ.2,00,000/– ஐ வாதியிடம் இருந்து பிரதிவாதி கடன் பெற்றார் அதற்காக தான் அந்த ஒப்பந்த பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரியல்ல, நிலம் விற்பதற்காக தான் எழுதப்பட்டது. பிரதிவாதி வேலு பலபேருக்கு தாவா சொத்தை விற்க முயற்சி செய்தார் என்று சொல்லியுள்ளேன் அது யாருக்கு என்று சொன்னால் 4, 5 நபர்கள் சொத்தை வாங்க விலைபேச வந்தார்கள், அதில் ராஜிவ்காந்தி தான் விலைபேசி அக்ரிமெண்ட் போட்டு அட்வான்ஸ் தொகையும் கொடுத்தார்.

4. வழக்கு தாக்கல் செய்த பிறகு பிரதிவாதி தாவா சொத்தை விற்பனை செய்ய பிரதிவாதி முறச்சி செய்வதாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் அது எப்படி எனக்கு தெரியும் என்றால் எனக்கு தெரிந்த நில புரோக்கர் தமிழன் என்பவர் வேலு நிலத்தை விற்க விலைசொல்கிறார்,

நிலம் கைமாற இருக்கிறது என்று சொன்னார் அதனால் எனக்கு தெரியும். தமிழன் என்பவர் என்னிடம் சொல்லிதான் பிரதிவாதி நிலத்தை விற்க உள்ளார் என்ற விவரத்தை நான் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பாக சொல்லவில்லை என்றால் நான் சொல்லியுள்ளேன். அரூர்–தருமபுரி நெடுஞ்சாலைக்கு அருகில் அரசு புறம்போக்கு நிலம் உள்ளதாக சொல்லியுள்ளேன் அது எவ்வளவு அளவு என்று தெரியுமா என்றால் 2 ஏக்கருக்கு உள் இருக்கும், அந்த புறம்போக்கு இடத்தை பொறுத்து அரசு பயன்பாட்டுக்கு கட்டிடங்கள் கட்ட தீர்மானங்கள் போடப்பட்டுள்ளது. நான் சொல்வதுபோல எந்த புறம்போக்கு நிலமும் இல்லை, 1993 லேயே அரசாங்கம் பிரதிவாதியின் தந்தைக்கு அனுபவ பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

5. 2012 ம் ஆண்டு புறம்போக்கு நிலத்தை 30 நபர்களுக்கு மேல் ஆக்கிரமிப்பு செய்ய கொட்டகை போட்டார்கள் என்று சொல்லியுள்ளேன் அது எவ்வாறு தெரியும் என்றால் 2012 ல் இல்லை நான் பஞ்சாயத்து தலைவராக இருக்கும் போது நடந்தது அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்தவர்கள் தாலுக்கா அலுவலகத்தில் அமைதி பேச்சுவார்தை நடத்தி, போலிசார் துணை கொண்டு அகற்றி விட்டோம். வேலு என்பவருக்கு எத்தனை மக்கள் என்றால் 2 பெண் குழந்தைகள். ஒப்பந்தம் செய்யப்பட்டதாக சொல்லும் தாவா சொத்தில் அந்த பெண் குழந்தைகளுக்கும் பாகம் உள்ளது என்றால் அந்த சமயத்தில் அந்த பெண் குழந்தைகள் மைனர் குழந்தைகள். மைனர் குழந்தைகள் என்றாலும் அவர்களுக்கும் பாத்தியம் உள்ளது என்று சொன்னால் எனக்கு தெரிந்து அவ்வாறு சட்டத்தில் இடம் இல்லை.

6. தாவா சொத்துக்கள் வேலுவிற்கு எப்படி பாத்தியம் என்றால் அவருடைய தாத்தா, பாட்டி சம்பாதித்த சொத்துக்கள். தாவா சொத்துக்கள் வேலுவிற்கும், அவருடைய குழந்தைகளுக்கும் பாத்தியப்பட்ட பிதுராஜ்ஜித சொத்துக்கள் அந்த சொத்தை வேலு மட்டும் தனியாக விற்க சட்டப்படி பாத்தியம் இல்லை, அவருக்கு தனிப்பட்ட உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வேலு அவருடைய பிள்ளைகளின் படிப்புக்காக மற்றும் குடும்ப செலவிற்காக வாதியிடம் ரூ.2,00,000/– கடன் மட்டுமே பெற்றார் அந்த கடன் பொறுப்புக்காக தான் ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டது நான் சொல்வதுபோல பிரதிவாதி தாவா சொத்துக்களை விற்பனை செய்வதற்காக அந்த ஒப்பந்தம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வியாபாரம் பேசும்போது நான் உடன்னிருந்ததால் வேலுவிடம் தாவா சொத்தை கிரயம் செய்து கொடுக்கசொல்லி கேட்டதாக சொல்லியுள்ளேன், அவ்வாறு எந்த தேதி நான் கேட்டேன் என்றால் பத்திரம் எழுதியதில் இருந்து ஒரு மாதம் கழித்து பணம் தயாராகி விட்டது கிரயம் செய்து கொடுங்கள் என்று கேட்டேன், அதன் பிறகு நான் கேட்கவில்லை, அந்த தேதி எனக்கு நினைவில்லை. யார் யார் போய்க்கேட்டோம் என்றால் நான் மட்டும் தான் போய் கேட்டேன்.

7. தாவா ஒப்பந்த பத்திரம் ஏற்படுவதற்கு முன்பு நான் சொல்வதுபோல கிரயம் எதுவும் பேசவில்லை, பின்னிட்டு பத்திர அலுவலகத்திற்கு சொல்வதும் பொய்யானது, பின்னிட்டு வேலுவிடம் கிரையம் எழுதி கொடுங்கள் என்று சொன்னதாக சொல்வதும் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. வாதி ராஜிவ்காந்தி கேட்டுக்கொண்டதற்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.07.14 16:17:38 +0530